

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதிக்கு ஒதுக்கப்பட்ட பள்ளியகரம் பகுதியில் திராவிட வெற்றி கழக தலைவர் மல்லை இ.சத்யா மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் ஆகியோர் வாக்கு சேகரித்தனர். உடன் பகுதி செயலாளர்கள் ஜெபதாஸ்பாண்டியன், இரா. லட்சுமணன், வட்ட செயலாளர்கள், கிளைச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பொறுப்பற்ற த.வெ.க. ஆட்சியில்

காவலர்களுக்கும் பாதுகாப்பற்ற சூழல் நிலவுகிறது!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை, செப்.30-

பொறுப்பற்ற த.வெ.க. ஆட்சியில் காவலர்களுக்கும் பாதுகாப்பற்ற சூழல் நிலவுகிறது என்று கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. விடுத்துள்ள ட்விட்டர் பதிவு வருமாறு:-

பரமக்குடி அரசு மருத்துவமனை அருகே ஆட்டோ ஓட்டுநர்களிடையே நடந்த மோதலைத் தடுக்கச் சென்ற தலைமைக் காவலர் கண்ணகி அவர்கள் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியளிக்கிறது.

இந்தப் பொறுப்பற்ற த.வெ.க. ஆட்சியில் இதுநாள் வரை பொதுமக்கள் தான் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இருந்தார்கள்; இப்போது காவலர்களுக்கும் பாதுகாப்பற்ற சூழல் உருவாகிக்கொண்டிருக்கிறது. த.வெ.க. அரசின் பொறுப்பற்றத்தனத்தால் தமிழ்நாடு அன்றாடம் அமைதியை இழந்துகொண்டிருக்கிறது.

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டை மதவெறி மண்ணாக்க அனுமதியோம்!

தனுஷ்கோடியில் அரசு சுற்றுலாத் துறையின் சார்பில் 'ராம யாத்திரை'யா? குழந்தைகளுக்குக் காவி உடையா?

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, செப்.30-

தனுஷ்கோடியில் அரசு சுற்றுலாத் துறையின் சார்பில் 'ராம யாத்திரை'யா? குழந்தைகளுக்குக் காவி உடையா? தமிழ்நாட்டை மதவெறி மண்ணாக்க அனுமதியோம் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



இராமநாதபுரம் மாவட்டம், தனுஷ்கோடி அரிச்சல் முனையில் கடந்த 27.09.2026 அன்று சுற்றுலாத்துறை சார்பில் நாட்டியாஞ்சலி நடத்தி, உலக சுற்றுலா நாள் கொண்டாடப் பட்டுள்ளது.

அதில், அபிநய நாட்டியாஞ்சலி என்னும் குழுவினருடன் இணைந்து சுற்றுலாத் துறை ஏற்பாடு செய்த நிகழ்ச்சிக்குப் பெயர் 'ராம யாத்ரா'வாம்!

ராம் யாத்ரா நடத்த வேண்டிய அவசியம் என்ன?

நூற்றுக்கணக்கான குழந்தைகள், கொளுத்தும் வெய்யிலில் போதுமான ஏற்பாடுகளின்றி அவதிப்படுத்தப் பட்டுள்ளனர். அனைத்துக் குழந்தைகளுக்கும் காவி உடை அணிவித்து இந்த நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறைக்குக் காவி உடை அணிந்து ராம் யாத்ரா நடத்த வேண்டிய அவசியம் என்ன? மதவெறியைத் தூண்டும் ஆர்.எஸ்.எஸ்.சும், இந்து முன்னணி வகையறாக்களும் ராமேஸ் வரத்தைத் தொடர்ந்து மத வெறித் தளமாகப் பயன்படுத்த முயற்சித்து வருகின்றனர். அதற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசும் வழிவகுக்க முயற்சிக்கிறது. இப்போது அந்தப் பாதையில் த.வெ.க. அரசு செல்கிறதா?

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பே, எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில். ராமநாதபுரம் என்பதை 'ராமன்நாடு' என்று ஆங்கிலத்தில் எழுத முயன்று, கடும் எதிர்ப்புகளை எழுப்பி, அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

இதே ராமன் கதையைச் சொல்லித் தான், தமிழ்நாட்டின் பொருளாதார நலனுக்குப் பெரிதும் பயன்பட்டிருக்க வேண்டிய சேதுக் கால்வாய்த் திட்டம், பல ஆயிரம் கோடி ரூபாய்கள் செலவழிக்கப்பட்ட பின்னர் நிறுத்தப்பட்டது.

குழந்தைகளைக் காவி உடையுடன் நிறுத்திய அதிகாரிகள் யார்?

பிஞ்சுக் குழந்தைகளைக் காவி உடையுடன் நிறுத்திய அதிகாரிகள் யார்? இதற்கு அனுமதி அளித்த சுற்றுலாத் துறை அதிகாரிகள் யார்? மாவட்ட ஆட்சியர் இதில் மிகுந்த அக்கறை காட்டினார் என்று சொல்லப்படுகிறதே, என்ன பின்னணி?

தமிழ்நாட்டை மறைமுகமாக ஆட்சி செய்து, மதவெறிக் காடாக்க நினைக்கும் பா.ஜ.க.வுக்கு ஒத்துழைப்போர் யாராயினும், அவர்களைத் தமிழ்நாட்டு மக்களும் ஏற்கமாட்டார்கள் - வரலாறும் மன்னிக்காது.

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மாவட்டக் கழகச் செயலாளர்கள் தா.மோ.அன்பரசன் – க.சுந்தர் முன்னிலை!

மதுராந்தகத்தில் மேயர் பிரியா ராஜன் - தமிழன் பிரசன்னா - இளம் பேச்சாளர்கள் ஸ்ரீலேகா - ஜோதி - ரோஜா தொடர் பிரச்சாரம்!

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிக்கை!

மதுராந்தகம், செப்.30-

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ. பரந்தாமன் அவர்களை ஆதரித்து, மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 13 பாகங்களில், வையாவூர், சூரை ஊராட்சிகளுக்குட்பட்ட 34, 35, 36 ஆகிய 3 பாகங்களில் உள்ள வாக்காளர்களை ஒருங்கிணைத்து வாக்கு சேகரிக்கும் வகையில், மேயர் பிரியா ராஜன், தமிழன் பிரசன்னா மற்றும் இளம் பேச்சாளர்கள் ஸ்ரீலேகா, ஜோதி, ரோஜா ஆகியோர் பங்கேற்கும் தொடர் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

இப்பிரச்சாரக் கூட்டங்கள் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ. அன்பரசன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர், மதுராந்தகம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சத்யசாய் நாதன், ஒன்றிய துணைச் செயலாளர் திருஞான செல்வம் ஆகியோர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு நடைபெறுகின்றன.



30.09.2026 புதன்கிழமை - மாலை 4.00 மணி

வையாவூர் ஊராட்சி - பாகம் எண் 34

பொறுப்பாளர்கள்: திரு. வி.க. நகர் வடக்கு - தெற்கு பகுதிக் கழகச் செயலாளர்கள்.

34-வது பாக உள்ளூர் பொறுப்பாளர்கள்: தியாக ராஜன், நாராயணன், பாலாஜி, தேனி, வினோத், தனிகாசலம், ரமேஷ், வேம்புலி, மணிகண்டன், சுரேஷ்.

30.09.2026 புதன்கிழமை - மாலை 5.00 மணி

வையாவூர் ஊராட்சி - படவட்டம்மன் கோயில் அருகில் - பாகம் எண் 35

பொறுப்பாளர்கள்: துறைமுகம் கிழக்கு - மேற்கு பகுதிக் கழகச் செயலாளர்கள், மாணவர் அணி மற்றும் விவசாய அணி நிர்வாகிகள்.

35-வது பாக உள்ளூர் பொறுப்பாளர்கள்:

பத்தன் அருள்ராஜ், D.G.M. பெருமாள், P. தாண்டவராயன், P. பார்த்திபன், சத்தியராஜ்.

30.09.2026 புதன்கிழமை - மாலை 6.00 மணி

சூரை ஊராட்சி - பாகம் எண் 36

பொறுப்பாளர்கள்: அம்பத்தூர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் மற்றும் நிர்வாகிகள்,

36-வது பாக உள்ளூர் பொறுப்பாளர்கள்:

சி.சுந்தரவரதன், பிரதாப், மதன் பால், நாகராஜன், நாகப்பன்.

மேற்கண்ட பிரச்சாரக் கூட்டங்களில் சென்னை கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த திரு.வி.க. நகர் வடக்கு - தெற்கு பகுதிக் கழக நிர்வாகிகள், துறைமுகம் கிழக்கு - மேற்கு பகுதிக் கழக நிர்வாகிகள், மாணவர் அணி, விவசாய அணி, அம்பத்தூர் கிழக்கு பகுதிக் கழக நிர்வாகிகள் மற்றும் 34, 35, 36 ஆகிய பாகங்களின் உள்ளூர் பொறுப்பாளர்கள், கழக நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும்.

மேலும், சம்பந்தப்பட்ட பாகங்களைச் சேர்ந்த வாக்காளர்களைப் பெருந்திரளாகப் பங்கேற்கச் செய்து, மேயர் பிரியா ராஜன், தமிழன் பிரசன்னா, மற்றும் இளம் பேச்சாளர்கள் மேற்கொள்ளும் இத்தொடர் பிரச்சாரத்தைச் சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

தாராபுரம் (தனி) தொகுதி இடைத்தேர்தல்!

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. பிரச்சாரம்!

தேசிய முற்போக்கு திராவிட கழக பொதுச் செயலாளர் திருமதி.பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. அவர்களின் 101 - தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைதேர்தல் சுற்றுப்பயண விவரம் :-



நாள் : 01.10.2026 (வியாழக்கிழமை)

வ.எண்	நேரம்	ஒன்றிய / நகர / பேரூர் கழகங்கள்	இடம்
1.	மாலை 5.45	மூலனூர் கிழக்கு ஒன்றியம்	நால்ரோடு (கருப்பன்வலசு)
2.	மாலை 7.15	கொளத்துப்பாளையம் பேரூர்	கரையூர்
3.	இரவு 8.15	தாராபுரம் மேற்கு ஒன்றியம்	அலங்கியம்

தேர்தல் பணிக்குழு

101 - தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி



சென்னை வடக்கு மாவட்டம். இராயபுரம் கிழக்கு பகுதிக்கு ஒதுக்கப்பட்ட புக்கத்துறை ஊராட்சி கோடித்தண்டலம் பகுதியில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் வாக்கு சேகரித்தார். உடன் பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் வட்ட செயலாளர்கள், கிளைச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தாராபுரத்தில் கழக வேட்பாளர்களை ஆதரித்து கழக இலக்கிய அணி பொருளாளர் நாகை சந்திரபாபு வீதி வீதியாகச் சென்று வாக்கு சேகரித்தார். வரகூர் காமராஜ், ஆவடி பாஸ்கர் உள்ளிட்ட தலைமைக் கழக பேச்சாளர்கள், கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

உஸ்பெகிஸ்தானில் நடந்த செஸ் ஒலிம்பியாட் போட்டியில்

பதக்கம் வென்ற தமிழ்நாட்டு வீரர்கள் தாயகம் திரும்பினர்!

எந்த துறையிலும் விரும்பி, ரசித்து செய்தால் வெற்றி என பேட்டி!

மீனம்பாக்கம், செப். 29-

உஸ்பெகிஸ்தானின் சமர்கண்ட் நகரில் 46வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி நடந்தது. இதில் உலகின் பல்வேறு நாடுகளை சேர்ந்த முன்னணி செஸ் வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். இந்தியா சார்பில் ஆடவர் அணியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த டி.குகேஷ், ஆர். பிரக்ஞானந்தா இடம் பெற்றிருந்தனர்.

மகளிர் அணியில் வைஷாலி, சவிதாஸ்ரீ இடம் பெற்றிருந்தனர். இந்திய அணியில் இடம் பெற்றிருந்த 10 வீரர், வீராங்கனைகளில், 4 பேர் தமிழகத்தை சேர்ந்தவர்கள்.

ஓபன் பிரிவில் நடப்பு சாம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்கிய இந்திய ஆடவர் அணி, இறுதி சுற்றில் ஹங்கேரியை எதிர் கொண்டது. இந்த ஆட்டம் 2-2 என்ற கணக்கில் டிராவில் முடிவடைந்தது.

11 சுற்றுகளின் முடிவில் 18 புள்ளிகளை பெற்ற இந்திய அணி வெள்ளி பதக்கத்தை வென்றது. தனிநபர் பிரிவில் குகேஷ் வெள்ளி பதக்கமும், பிரக்ஞானந்தா வெண்கல பதக்கமும் வென்றனர்.

மகளிர் பிரிவில் இந்திய அணி இறுதி சுற்றில், ஜார்ஜியாவை எதிர்கொண்டது. இந்த ஆட்டமும் 2-2 என்ற கணக்கில் டிராவில் முடிவடைந்தது. 17 புள்ளிகளுடன் இந்திய மகளிர் அணி வெண்கல பதக்கத்தை கைப்பற்றியது. தனிநபர் பிரிவில் சவிதாஸ்ரீ தங்க பதக்கம் வென்று சாதனை படைத்தார். போட்டியில் அவர் விளையாடிய 9 சுற்றுகளில் ஒரு தோல்வியைக்கூட சந்திக்காமல் சிறப்பாக செயல்பட்டார்.

இந்நிலையில் பதக்கம் வென்ற தமிழக வீரர், வீராங்கனைகள் நேற்றிரவு விமானத்தில், சென்னை வந்தனர். அவர்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பிலும், குடும்பத்தினர் நண்பர்கள் சார்பிலும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அப்போது திருபர்களிடம் பிரகஞானந்தா கூறியதாவது

பல வலுவான அணிகளும் முன்னணி வீரர், வீராங்கனைகளும் பங்கேற்ற இந்த போட்டியில், 2ம் இடம் பிடித்து வெள்ளி பதக்கம் வென்றது. பெரு மகிழ்ச்சி அளிக்கிறது. பல போட்டிகள் கடுமையான போராட்டத்திற்கு பிறகே வெற்றியாக அமைந்தன. தமிழக முதல்வர் வாழ்த்து தெரிவித்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. விளையாட்டு வீரர்களுக்கு கிடைக்கும். இதுபோன்ற அங்கீகாரமும், ஆதரவும் மேலும் பல சாதனைகளை படைக்க ஊக்கமளிக்கிறது. இளைஞர்கள் எந்த துறையை தேர்ந்தெடுத்தாலும், அதனை விரும்பி, ரசித்து செய்ய வேண்டும் சிறந்த உழைப்பை வழங்கினால் உயர்த்த நிலையை அடைய முடியும். நானும் வைஷாலியும் பல ஆண்டுகளாக ஒன்றாக விளையாடி வருகிறோம். போட்டிகள் குறித்து இருவரும் விவாதிப்போம்.

அது எங்கள் இருவரின் ஆட்டத்திற்கும் வெற்றிக்கும் பெரும் உதவி யாக இருந்தது என்றார். சவிதாஸ்ரீ கூறுகையில், சீனாவுக்கு எதிரான போட்டி மிகவும் கடுமையாக நடைபெற்றது. அந்த போட்டியில் வெற்றி பெற் றிருந்தால், தங்க பதக்கம் உறுதியாகியிருக்கும். ஆனால் 2-2 என்ற கணக்கில் போட்டி டிரா ஆனது.

அதனை தொடர்ந்து பலம் வாய்ந்த, ஜார்ஜியா அணியுடன் விளையாடி, போட்டியை டிரா செய்தோம். இதன் மூலம் வெண்கல பதக்கம் கிடைத்தது. நாட்டிற்காக பதக்கம் வென்றது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. அணி பிரிவில் வெண்கலம் வென்றாலும், தனிப்பட்ட போர்டில் தங்க பதக்கம் வென்றுள்ளேன். இது எனது முதல் ஒலிம்பியாட் தொடர் என்பதால் தங்கம் வெல்வேன் என்று எதிர் பார்க்கவில்லை. இதனால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. விரைவில் கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை பெறுவதே எனது இலக்கு. இதற்காக தினமும் 6 மணி நேரம் வரை பயிற்சி மேற் கொண்டு வருகிறேன்' என்றார்



மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளராகப் போட்டியிடும் இ.பரந்தாமனை ஆதரித்து சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய் தலைமையில் அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியம், வெள்ளப்புத்தூர் ஊராட்சி, பாகம் எண். 43ல் வசிக்கும் பொதுமக்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரித்தனர். உடன் சென்னை மேற்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் டி.கே.லதா ஃபிளாரன்ஸ், வெள்ளப்புத்தூர் கிளை கழகச் செயலாளர் ஏழுமலை, தமிழ்மணி கருணாகரன், பகுதி அமைப்பாளர் ஜி.எம்.ஸ்ரீதரன் உள்ளிட்ட கழகத் தோழர்கள் வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து வீடுவீடாகச் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.



மதுராந்தகம் இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் ஐ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து சென்னை வடக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட குமாரவாடி ஊராட்சியில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் அறிவுறுத்தலின்படி ஊராட்சி மன்ற தலைவர் எம்.கண்ணன், துணைத் தலைவர் வி.முருகன் தலைமையில் குளக்கரை தெரு, நடுத்தெரு வீதிகளில் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தனர். கழக நிர்வாகிகள் உடன் கலந்து கொண்டனர்.